# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 19 திங்கட்கிழமை 03.07.2023 கதிர் 16



செய்திகளையும் இன்னும் பல
காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்


# முல்லைத்தீவு மனிதப் புதைகுழி விடயத்தில் நீதிமன்றத்தைக் கைகாட்டும் அரசாங்கம்

## ஜனாதிபதியும், நீதியமைச்சரும் நழுவல்

**முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மத்தியில் இராணுவச் சீருடைகள், பெண்களின் ஆடைகள் என்பவற்றுடன் மனித எச்சங்களும் கடந்த 29 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தன. இது தொடர்பான மேலதிக அகழ்வுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக முன்னெடுக்கப்படவுள்ளன.**

**இந்தப் புதைகுழி அகழ்வு சர்வதேச மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தரப்பால் வலியுறுத்தப்படுகின்றது.**

**இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியது.**

**இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயத்தை ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். இந்த விவகாரம் நீதிமன்றத்தின் முன் பாரப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அடுத்தகட்டப் பணிகள் இடம் பெறும். இதைவிட மேலதிகமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை, எனக் கூறியுள்ளார்.**

**இதேவேளை, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பதிலளிக்கையில், போர் இடம்பெற்ற பகுதிகளில் புதைகுழிகள் இருக்கத்தான்** 2➤



## ஏழைகளின் இறுதிச் சேமிப்பைக் கொள்ளையடிக்கும் அரசாங்கம் - நாடாளுமன்றில் சிறிதரன் குற்றச்சாட்டு



ஏழைகளின் இறுதிச் சேமிப்பைக் கொள்ளையடிக்கும் அரச தலைவர்கள் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வினை வழங்கவில்லை, எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மத்திய வங்கிக் கொள்ளை, யுத்தத்தின் போது கொள்ளை என வெளிநாடுகளில் சொத்துக்களைப் பதுக்கி வைத்துள்ள அனைவரும், மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடிக்க நினைக்கிறார்களே தவிர, நாட்டில் உள்ள உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களின் சேமிப்பைக் கொள்ளையடிக்கும் நிலைக்கு அரசாங்கம் இன்று வந்துள்ளது, என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் எதிர்காலத் தலைமுறையினர் குறித்து எவ்விதத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என்பதோடு, சிறந்த தலைவர் சிங்களவர்களிடம் இல்லை என்பதையே காலம் உணர்த்தும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஏனைய 2➤

## இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அக்கறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இல்லை

### நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்

இனப்படுகொலை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து பிரான்ஸில் வைத்துப் புலம்பெயர் தமிழர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்காமல், அவரைக் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பகிரங்க மன்னிப்பைக் கோரவேண்டும், என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுப்புக்கூறல் குறித்த கேள்விக்குப் பதிலளிப்பதை தவிர்க்கும் வகையில் ஜனாதிபதி இவ்வாறு செயற்பட்ட விதத்தைக் கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேநேரம், இந்த மாதம் 30 ஆம் திகதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு



காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டபோதும், இதுவரை முன்னேற்றகரமான எந்த நடவடிக்கைகளும் அவரால் எடுக்கப்படவில்லை என்றும் சாணக்கியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக ஒரு வாரத்துக்குள் நாடாளுமன்றத்துக்குள் ஒரு பிரேரணையைக் கொண்டு வர முடிந்த அவரால், ஏன் நாட் டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது?, என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அக்கறை 2➤

## யாழ் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் கசிப்பு காய்ச்சியவர் புலனாய்வினரால் கைது

யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அருகில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 28 வயதுடைய அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸ் 2➤



## நாட்டு மக்களுக்குக் குப்பை மட்டுமே மிச்சமாகும் பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரிக்கை!



தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டை வீழ்ச்சியடையச் செய்து வருவதாக கொழும்புப் பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், 2048 இல் அபிவிருத்தி அடைவோம்!, என்ற பொய்யான கருத்தை வெளியிடக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

பொய்யான வாக்குறுதிகளை எங்களுக்குக் கொடுக்காதீர்கள், ஜனாதிபதி அவர்களே! இது 2024 வரை நீடித்தால் இந்த நாடு அழிந்துவிடும்.

20 வீதமான மக்கள் நாட்டின் அனைத்து வளங்களையும் எடுத்துக்கொண்டுள்ளனர். 80 வீதமான மக்களுக்குச் சரியான உணவைப் பெறமுடியவில்லை.

கொழும்புத் துறைமுகம் டிகோவிட்ட வரை நீடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், தற்போது அரசாங்கம் துறைமுகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பல்வேறு நாடுகளுக்கு விற்பனை செய்கின்றது.

தற்போதுள்ள துறைமுகம் துண்டு துண்டாக விற்கப்படுகிறது. இந்த மனிதன் என்ன கனவு காண்கிறான்? அவருடைய இலக்கு என்ன? இதுதான் இலக்கு! முத்துராஜவெல முழுவதையும் அழித்துவிட்டு, இவற்றை வெளியூர்களுக்கு விற்று, சாப்பிட்டு, குடித்து, உல்லாசமாகச் செத்துவிடுவார்கள்.

நாட்டு 2➤

## திருமலையில் துப்பாக்கிச்சூடு இரண்டு இளைஞர்கள் காயம்

திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இருவர்



படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குச்சவெளி - வடலிக்குளம் பகுதியைச் 2➤



## நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் தீர்த்தத் திருவிழா

வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா இன்றைய தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

ஆலயத்தில் காலை இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாகபூசணி அம்மன், பிள்ளையார் மற்றும் முருகன் சகிதம் நூற்றுக் கணக்கான பக்தர்கள் சூழ ஆலயத்தில் இருந்து தீர்த்தக்கரைக்கு எழுந்தருளி கங்காதரணியில் தீர்த்தமாடினார்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தி விழாவும் நூல் வெளியீடும்





யாழ்ப்பாணம் - கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தி விழா இன்றைய தினம் இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் கோண்டாவிலில் உள்ள சிவபூமி பாடசாலையில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 அளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீ சற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி வை.மனோமோகன் தம்பதிகளும் கலந்து கொண்டனர். அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிவபூமிப் பாடசாலை அதிபர், சிவபூமிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் பங்குகொண்டனர்.

இதன்போது, சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தி விழா சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டு, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனின் வரலாற்றை ஆங்கில மொழியில் எடுத்து கூறும் நூலும் வெளியிடப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் முதன் நிலைப்பாடசாலையாக “சுபஅபிமானி” விருது பெற்று மிளிரும் சிவபூமி பாடசாலையின் மாணவர்கள் சர்வதேச ரீதியில் விசேட தேவையுடோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று தடவை கிறீஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்று பதக்கங்கள் பெற்றமை பற்றியும் நிகழ்வில் பகிரப்பட்டது.

# உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டி உள்ளூராட்சி மன்றங்களை நவீனமயமாக்கல்





(நூருல் ஹுதா உமர்)

கனேடிய உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் அமுல்படுத்தப் படுகின்ற “உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டுவதின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்” சேவை பகுப்பாய்வு கருவி தயார்படுத்துவதற்கு பொருத்தமான பயிற்சிநெறி கோறளைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் எஸ். நவநீதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

குடிமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் வழங்கப்படும் பொதுச் சேவைகளை பகுப்பாய்வு செய்ய இந்த சேவை பகுப்பாய்வு கருவி பயன்படுத்தப்படும் என்றும், பாலின சமத்துவத்தைப் பாதுகாப்பதும், அதிகார வரம்பின் அனைத்து குடிமக்களுக்கும் சமமான முறையில் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதும் இதன் முக்கிய நோக்கமாக அமைய உள்ளதாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

கனேடிய தேசிய வளவாளர்கள் இந்தச் சேவைப் பகுப்பாய்வு கருவி குறித்து எதிர்காலத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்ய உள்ளதுடன், அதை கோறளைப்பற்று பிரதேச சபைக்கு ஏற்ப மாற்றியமைப்பதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது.

இந்தப் பயிற்சிக் கலந்துரையாடலில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர பிரதம வளவாளராக கலந்து கொண்டார். இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பிரதீப் பயிற்சிநெறிக்கு நெறிப்படுத்தித்துனராகவும், உள்ளூராட்சி மன்றங்களின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம். வலீத், கோறளைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி காரியலய பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகாத்தர்கள், சமூக பொதுநிறுவன நிர்வாகிகள் உட்பட்ட பலரும் இணைந்துகொண்டனர்.

# தனியார் பல்கலைகளில் கற்பதற்கும் வட்டியில்லா கடன் வழங்க நடவடிக்கை

கடந்த 2019 ,2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 5000 மாணவர்களுக்கு, தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர, வட்டி இல்லாக் கடன் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த வேலைத் திட்டத்துக்கான விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கைகள் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விண்ணப்பிக்கும் மாணவர்கள் முழுநேரக் கல்வியில் ஈடுபடுபவர்களாக இருக்க வேண்டுமென்றும், உரிய கடன் தொகை பெறும் மாணவர்கள் வேலை வாய்ப்பு சார்ந்த கற்கை நெறிகளை கற்க வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## திருமலையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த ஏ.அஸ்மி (வயது 17), ஐ.அஸ்கான் (வயது 21) ஆகிய இருவருமே துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் இருவரும் பயணித்துக் கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் குச்சவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டு மக்களுக்குக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்குக் குப்பை மட்டுமே மிச்சமாகும். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த நடவடிக்கை தொடருமானால் 2048 ஆம் ஆண்டளவில் நாடு அழிந்துவிடும், என அவர் எச்சரித்துள்ளார்.

## யாழ் புகையிரத ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்

கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 30 லீற்றர் கோடா, உபகரணங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழாக இயங்கும் மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

## இனப் பிரச்சினைக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு இல்லை என்பதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுவதாகவும் இரா. சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

## ஏழைகளின் இறுதிச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனங்களையும் இணைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியது அவசியம், என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமாயின், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தற்துணிவுடன் செயற்படுத்த வேண்டும், என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வலியுறுத்தியுள்ளார்.

## முல்லைத்தீவு மனிதப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும். அவற்றைத் தோண்டும்போது சடலங்களும் ஆயுதங்களும் மீட்கப்படும். முல்லைத்தீவு புதைகுழியிலிருந்து போரில் ஈடுபட்ட ஒருதரப்பின் சீருடைகள் மீட்கப்பட்டதாக அறிந்தேன்.

நீதிமன்றம் அந்தப் புதைகுழியை அகழ்வதற்கான உத்தரவையும் விடுத்துள்ளது. அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் இப்போது எல்லாம் பதிலளிக்க முடியாது. அதேவேளை அந்தப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கும் என்னால் பதில் கூற முடியாது. எனத் தெரிவித்துள்ளார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை தமிழ் அரசுக் கட்சியே பயன்படுத்தமுடியும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு எழுத்தில் அறிவிப்பு




தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயர் தமக்கே சொந்தம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவித்து வரும் நிலையில், அந்தப் பெயரை வழங்குவதற்கு இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு மறுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பதத்தினை, தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் பயன்படுத்தவே அனைவரும் இணங்கி ஒப்புதல் வழங்கியதனால் அந்தக் கட்சியின் சின்னத்திற்கே இப்பெயரைப் பயன்படுத்த முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆர்.ராகவனை செயலாளராக் கொண்டு பதிவு செய்யப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெயரில் உள்ள ஜனநாயகத்தை நீக்கி, தமிழ்த் தேசியக் கூட்டணி என மட்டும் செயல்படவும், அதனை ஆங்கிலத்தில் வு.டே.யு எனக் குறிப்பிடவும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பம் தொடர்பாக, 2023 மே மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதே பெயரில் வேறு கட்சி நீண்ட காலமாக இயங்குவதனால் இந்தப் பெயருக்கு அனுமதி வழங்க முடியாது, என தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்து, குறித்த கட்சிக்கு எழுத்தில் பதில் அளித்துள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் தற்போது 5 கட்சிகள் கூட்டாக இயங்குவதோடு, 5 கட்சிகளின் தலைவர்களும் இணைத் தலைவர்களாக செயற்படுகின்றனர். இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆரம்பிக்கும்போது இருந்த 5 கட்சிகளில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய இரு கட்சிகளும் இந்தக் கூட்டணியில் இருப்பதனால், அந்தப் பெயர் தமக்கே சொந்தம் என இவர்கள் தெரிவித்து வந்த நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு அந்தப் பெயரை வழங்கிட மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறிவிட்டதாக ரெலோவும் புளொட்டும் அறிவித்து, தம்முடன் ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றையும் இணைத்துக்கொண்டு தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என கூறிவந்தனர்.

இதற்கமையே இக்கட்சியினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கப்பட்ட நிலையில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தமது பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என தேர்தல்களுக்கு பயன்படுத்த என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## பலவந்தமாக நுழைந்து யுவதியைத் தாக்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை, 03

தனமல்வில, ரணவர பிரதேசத்தில் வசிக்கும் யுவதி ஒருவரின் வீட்டிற்குள் பலவந்தமாக நுழைந்து, யுவதியைத் தாக்கிக் காயப்படுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாகவும், இருவரும் காதலர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சந்தேகத்திற்குரிய கான்ஸ்டபிள் பயிலுநர் நேற்று பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பந்தமாக திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றத்திலும் அறிக்கை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கனரக வாகனம் - கார் விபத்து கனடாவில் சிறுமி உயிரிழப்பு




*கனடாவின் கியூபெக் மாகாணத்திலுள்ள மொன்ட் ரியலில் இருந்து தென்மேற்கே பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி, 13 வயது சிறுமி ஒருவர் இறந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.*

*குறித்த வீதியில் பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனம், கட்டுப்பாட்டை இழந்து அருகே பயணித் துக்கொண்டிருந்த கார் மீது மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.*

*விபத்து, நேற்று உள்ளூர் நேரப்படி காலை 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.*

*குறித்த விபத்தில், காரில் பயணித்த 10 வயது சிறுதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் நால்வர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

# ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிப்போம்!

## நாமல் ராஜபக்ஷ உறுதியளிப்பு



தேர்தல் ஊடாக ராஜபக்சர்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகுவிரைவில் தோற்றுவிப்போம், என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கஸ்பாவ தொகுதி அமைப்பாளர்களுக்கான கூட்டத்தில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் மத்தியில் ராஜபக்சர்கள் தொடர்பில் நல்லதொரு நிலைப்பாடு காணப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதற்காகவே மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த அரசாங்கத்தையே மகிந்த ராஜபக்ச, நல்லாட்சி அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்.

நல்லாட்சி அரசாங்கம் நாட்டை முன்னேற்றுவது குறித்து அவதானம் செலுத்தாது, ராஜபக்சர்களை பழிவாங்குவது குறித்து கவனம் காண்பித்தது. ராஜபக்சர்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், ராஜபக்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் எந்தக் குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் சொத்துக்களைப் பதுக்கி வைத்துள்ளார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, என அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

அரசியல் பிரசாரத்துக்காகவே ராஜபக்சர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. 2019ஆம் ஆண்டு பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஒரு தரப்பினரது தவறான ஆலோனைகளினால் அரசாங்கம் குறுகிய காலத்துக்குள் பலவீனமடைந்தது. பொருளாதாரப் பாதிப்பு அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தது.

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம். அரசியல் ரீதியில் பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சரியானது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கட்சி என்ற ரீதியில் சிறந்த முறையில் போட்டியிடுவோம். தேர்தல் ஊடாக ராஜபக்சர்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகுவிரைவில் தோற்றுவிப்போம், என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உறுதிபடக் கூறியுள்ளார்.

## இஸ்ரேல் – இலங்கை நேரடி விமான சேவை விரைவில்

இஸ்ரேலுக்கும் இலங்கைக்குமிடையிலான நேரடி பயணிகள் விமான சேவை எதிர்வரும் ஒக்டோபர் முதல் ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இரண்டு நாடுகளின் சிவில் விமான சேவை அதிகாரிகளின் பங்குபற்றலுடன் அண்மையில் இடம்பெற்றது.

இதன்படி, இஸ்ரேலின் டெல் அவிவில் இருந்து கட்டுநாயக்க வரை நேரடி பயணிகள் விமான சேவைகள் முதன்முறையாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன், இஸ்ரேலின் அகியா விமான சேவைக்குச் சொந்தமான விமானங்கள் இலங்கைக்கான இந்த சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# அமெரிக்காவின் பால்டிமோர் விழாவில் துப்பாக்கிச் சூடு - இருவர் உயிரிழப்பு




அமெரிக்காவின் மேரிலான்டிலுள்ள பால்டிமோர் நகரில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 28 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிகழ்வொன்றுக்காக அதிகளவானோர் கூடியிருந்த போது அமெரிக்க நேரப்படி அதிகாலை 12.30 அளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தொடர்பான விபரங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களில் அதிகளவானோர் 18 வயதிற்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதன் நோக்கம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை எனவும், இந்த சம்பவம் குறித்து ஏதேனும் தகவல் தெரியும் பட்சத்தில் முன்வந்து தகவல்களை வழங்குமாறு அமெரிக்கப் பொலிஸார் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# பாலஸ்தீன ஜெனின் முகாம் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்



வடக்கு மேற்குக் கரையில் உள்ள ஜெனின் முகாம் மீது இஸ்ரேலிய இராணுவம் பாரிய இராணுவத் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

விமானத் தாக்குதல்களுடன் தொடங்கிய குறித்த தாக்குதலுடன் தொடர்புடைய காட்சிகள் சமூக ஊடகங்களில் காணொளிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

குறித்த தாக்குதலில், இதுவரையில் மூன்று பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 12 பேர் காயமடைந்ததாகவும் பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜெனின் முகாமை மறைவிடமாகப் பயன்படுத்தி பயங்கரவாதிகள் பொதுமக்களுக்குத் தொடர்ந்து தீங்கு விளைவிக்கும்போது நாங்கள் சும்மா இருக்க மாட்டோம் என இஸ்ரேலின் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். ஜெனின் முகாமை அவர்கள் பயங்கரவாதக் கோட்டை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலையடுத்து, எதிர்த் தாக்குதலை மேற்கொள்வதற்காக ஆயுதம் ஏந்திய, முகமூடி அணிந்த பாலஸ்தீனியர்கள் முகாமின் எல்லையினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த மாதம், இஸ்ரேலிய இராணுவம் ஜெனின் முகாம் மீது நடத்திய தாக்குதலில் ஆறு பாலஸ்தீனியர்களும், ஏழு இஸ்ரேலிய வீரர்களும் எல்லைப் பொலிஸ் அதிகாரிகளும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மராட்டிய அரசியலில் திருப்பம் சரத்பவாரின் கட்சி உடைந்தது!



மகாராஷ்டிராவில் தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவாருடனான மோதலால், அக்கட்சியிலிருந்து வெளியேறிய அஜித் பவார், நேற்று அம்மாநிலத்தில் ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசில்இணைந்து, துணை முதல்வராகப் பதவியேற்றார். அவரது ஆதரவு எம்.எல்.ஏக்கள் 29 பேரில் 8 பேருக்கு அமைச்சர் பதவியையும் அவர் வாங்கிக் கொடுத்துள்ளார்.

ஏற்கனவே, சிவசேனாவை உடைத்து ஏக்நாத் ஷிண்டே முதல்வராகி, ஒன்றரை வருடமாக ஆட்சி நடத்தி வரும் நிலையில், அஜித் பவாரும் தேசியவாத காங்கிரஸை உடைத்திருப்பது மகாராஷ்டிர அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பா.ஜ.க. ஆளும் அரசில் இணைந்தது குறித்து தெரிவித்த அஜித் பவார், பெரும்பான்மையான எம்.எல்.ஏக்களின் ஆதரவு எங்களுக்கு உள்ளது. நாட்டை பிரதமர் மோடி முன்னெடுத்துச் செல்கிறார். அவருடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன். இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த முடிவை எடுத்துள்ளேன். எதிர்க்கட்சிகள் மத்தியில் ஒற்றுமை இல்லை. அவர்களுக்குள்ளேயே மோதல் உள்ளது.

அக்கட்சிகள் பேசிக் கொண்டு மட்டுமே உள்ளன. அக்கட்சிகள், நாட்டின் வளர்ச்சிக்கு எந்தப் பங்களிப்பும் செய்யவில்லை. சிவசேனாவுடன் இணைந்து செயல்படும்போது பா.ஜ.க.வுடன் ஏன் இணைந்து செயல்பட முடியாது? கட்சியின் சின்னம் மற்றும் பெயரைப் பயன்படுத்துவோம். அதன் பெயரிலேயே தேர்தலில் போட்டியிடுவோம். தேவைப்பட்டால் சின்னம், பெயருக்காகப் போராடத் தயாராக உள்ளோம். - எனக் குறிப்பிட்டிருக்கிறார்.



## மெக்சிகோவில் வினோதமான நம்பிக்கை பெண் முதலையை திருமணம் செய்த மேயர்

தெற்கு மெக்சிகோவில் உள்ள நகரம் சான் பெட்ரோ /ஹவாமெலுலா. இந்த நகரத்தின் மேயராக இருப்பவர் விக்டர் ஹியூகோ சொசா. இவர், ஆலிசியா ஆட்ரியானா என்ற பெயர் கொண்ட பெண் முதலை ஒன்றை பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இது 230 ஆண்டு கால பழமையான நடைமுறையாகும். இதனால், மழைப் பொழிவு இருக்கும், பயிர்கள் செழிப்புடன் வளரும், அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்படும் என்ற நம்பிக்கை இங்கே நிலவுகிறது.

சொந்தல் மற்றும் /ஹவாகே ஆகிய இரு உள்ளூர் குழுக்களுக்கு இடையேயான அமைதிக்கான ஓர் அடையாளம் இந்த திருமணம். இதனால், நல்ல அதிர்ஷ்டம் கொண்டு வரப்படும் என நம்பப்படுகிறது.

இந்தத் திருமணம் நடைபெறுவதற்கு முன்பு, முதலைக்கு இளவரசி போன்று ஆடைகள் அணிவிக்கப்பட்டன. பாதுகாப்புக்காக அதன் வாயைக் கட்டிவிட்டனர். முதலையை மக்களின் வீடுகளுக்கு கொண்டு சென்று, நடனம் ஆடி மகிழ்ந்துள்ளனர். திருமணம் செய்த பின்னர், மணமகளான முதலையை கையில் வைத்து கொண்டு மேயர் சொசா, உற்சாக நடனம் ஆடினார்.

கலாசார இணைவை கொண்டாடும் இந்த நிகழ்ச்சியின் நிறைவாக அதற்கு மேயர் சொசா முத்தமிட்டார். அதன் பின்னர் நிகழ்ச்சி முடிவுக்கு வந்தது. அந்த நாட்டில் இந்த வினோதச் சடங்கு பல ஆண்டுகளாக பாரம்பரிய முறைப்படி கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

# கம்போடியா கேளிக்கை விடுதி தீ விபத்தில் சிக்கி 8 பேர் பலி



கம்போடியா நாட்டின் தலைநகர் புனோம் பென்னில் அமைந்துள்ள கேளிக்கை விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் எண்மர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விடுதியின் ஒருபுறம் கட்டிடத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதேசமயம் விடுதியின் ஓர் அறையில் கேளிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. வார விடுமுறையை முன்னிட்டு அங்கு பலர் சென்றிருந்தனர்.

இந்த நிலையில், விடுதியின் ஓர் அறை திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதுகுறித்து தகவலறிந்த தீயணைப்புப் படையினர், அங்கு விரைந்து சென்று தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும், இந்தத் தீ விபத்தில் 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பலியாகினர். தீப்பரவலாலும், கூட்ட நெரிசலிலிலும் சிக்கி காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## கொலம்பியாவில் பயிற்சி விமானங்கள் விபத்தில் இரு விமானிகளும் மரணம்

கொலம்பியாவில், நடுவானில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இரு இராணுவ விமானங்கள் மோதியதில் 2 விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து, கடந்த சனிக்கிழமை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அபியாய் விமானப்படைத் தளத்தில், கொலம்பிய விமானப்படைக்கு சொந்தமான விமானங்களில் விமானிகள் சாகச பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது, எதிர்பாராத விதமாக அந்த 2 விமானங்களும் ஒன்றோடொன்று மோதித் தீப்பற்றியுள்ளன. விபத்து குறித்த விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

# தையிட்டியில் விகாரை அமைப்புக்கு எதிராக இரண்டாம் கட்டப் போராட்டம் தொடர்கிறது



யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிராக இன்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரைக்கு எதிரான மூன்றாம் கட்ட போராட்டம் நேற்று போராட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில், பலாலி பொலிஸார் பல்வேறு வகையில் அச்சுறுத்தலையும் இடர்களையும் ஏற்படுத்தியுள்ள நிலையிலும் இன்றும் இரண்டாவது நாளாக போராட்டம் தொடர்ந்துள்ளது.

இன்று போயா தினம் என்பதால் விகாரையில் விசேட வழிபாடுகள் இடம்பெறும் நிலையில், போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிராக வழமையாக போராட்டம் நடத்தும் காணி உரிமையாளர் பலாலி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

விகாரைக்கு அருகிலுள்ள குறித்த தனியார் காணிக்குள் கடந்த 3 தடவைகளும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே காணி உரிமையாளர் நேற்றுக் காலை விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

விசாரணையின்போது, எத்தனை தடவைகள் காணி வழங்கினீர்கள்? ஏன் காணி வழங்குகின்றீர்கள்? என வினாக்களைத் தொடுத்து, அவரை உளவியல் ரீதியாக அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்டுள்ளனர் எனவும், அந்தக் காணிக்குள் போராட்டக்காரர்கள் பிரவேசிக்க முடியாதவாறு பொலிசார் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரவித்துள்ளார்.

## சுண்டிக்குளம் பறவைகள் சாரணாலயத்தில் சட்டவிரோத மணல் அழ்வு குறித்து ஆராய்வு

சுண்டிக்குளம் பறவைகள் சாரணாலயத்தின் கல்லாறு பகுதியில் சட்டவிரோதமாக இடம்பெறும் மணல் அகழ்வு குறித்துப் பல்வேறு தரப்பினரும் முறைப்பாடுகளை முன்வைத்துவருகின்றனர்.

இயற்கையைப் பாதிக்கும் விதத்தில் காடுகளை அழித்தும் மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிவதாக விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த பகுதியைப் பார்வையிடுவதற்காக, வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் சட்டங்களுக்கு பொறுப்பான உதவிப்பணிப்பாளர் டி.எம். வீரசிங்க தலையிலான குழுவினர் இன்று வருகை புரிந்தனர்.

அவர்கள் பல்வேறு ஆய்வுகளை அங்கு முன்னெடுத்திருந்ததோடு, தகவல்களையும் சேகரித்துள்ளனர்.



## முத்துராஜா யானைக்கு சிகிச்சை ஆரம்பம்!

தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட முத்துராஜா யானைக்கு சிகிச்சையளிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

20 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்குப் பரிசளிக்கப்பட்ட 'முத்துராஜா' யானை, நேற்று விசேட விமானத்தின் ஊடாக தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

முத்துராஜாவின் காலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு சிகிச்சையளிக்கும் நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பரிசோதனைகளுக்குத் தேவையான இரத்த மாதிரிகள் யானையிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாட்டு மக்களை மீட்டெடுத்த சிறந்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க - சாகல புகழ்ச்சி

துன்பத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த நாட்டு மக்களை மீட்டெடுத்த சிறந்த தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் ஜனாதிபதி பணியாட்தொகுதியின் பிரதானியுமான சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா தொகுதிக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு புகழ்ந்துள்ளார்.

அத்தோடு, அஸ்வெசும திட்டம் தொடர்பில் இதுவரை 4 இலட்சத்து 91 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. 6,773 ஆட்சேபனைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த மேன்முறையீடுகள், ஆட்சேபனைகள் தொடர்பில் பரிசீலனை நடத்தப்பட்டு குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் அஸ்வெசும திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## லிட்ரோ எரிவாயுவின் விலை மேலும் குறைக்கப்படுகிறது

### விலை விபரம் நாளை வரும்

12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலையை மூவாயிரம் ரூபாவுக்குள் மட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, விலை குறைக்கப்படும் அளவு தொடர்பில் நாளை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டது.

இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 452 ரூபாவால் குறைக்கப்பட்டு தற்போது 3,186 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 181 ரூபாவாலும், 2.3 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 83 ரூபாவாலும் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## டெங்கினால் மேலும் 4 மரணங்கள் பதிவு



டெங்கு தொற்று காரணமாக இலங்கையில் மேலும் 4 மரணங்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

இந்த வருடத்துக்குள் மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தை தாண்டியுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று வரை 49 ஆயிரத்து 559 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில் அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 10 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் 24 ஆயிரத்து 730 பேர் பாதிக்கப்படுள்ளனர்.

அத்துடன், ஜூன் மாதத்தில் 9 ஆயிரத்து 916 டெங்குத் தொற்றாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது கடந்த ஜனவரி 2023 இற்குப் பிறகு ஒரு மாதத்திற்குள் பதிவான அதிக எண்ணிக்கையாகும்.

இந்த நிலையில், டெங்குக் காய்ச்சலைத் தடுக்கும் வகையில், மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்ளவும், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அகற்றவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மருந்துத் தட்டுப்பாட்டைத் தடுக்க புதிய வேலைத்திட்டம் அறிமுகம்



எதிர்காலத்தில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அரசாங்கம் புதிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கொள்முதல் செயல்முறையை வினைத்திறனாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

"நிலையான நாட்டை நோக்கி" அனைவரும் ஒரே பாதையில்" என்ற தலைப்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறுசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2023இல் வெளியிடப்பெற்றது.